**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – தூய்மைப் பணியாளர் நல வாரியத்தை ஆங்கிலத்தில் Cleanliness Workers Welfare Board என அழைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை**

அரசாணை (நிலை) எண். 131

நாள்: 22.09.2023
சோபகிருது ஆண்டு
ஆவணி 05-ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.71, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந6) துறை, நாள்: 11.06.2007.
2. அரசாணை (நிலை) எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.05.2020.
3. அரசாணை (நிலை) எண். 39, பணியாளர் நிர்வாகச் சீர்திருத்த துறை, நாள் 30.03.2021.

*********

**ஆணை :-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தூய்மைப் பணிபுரிவோர் மற்றும் அவர்களை சார்ந்தோரின் நலன் கருதி அவர்களுக்கு தனியாக "தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்" என்ற அமைப்பினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 11.06.2007 அன்று உருவாக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணை தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவையில் விதி எண். 110-இன் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை "தூய்மை பணியாளர்கள் (Cleanliness Workers)" என அழைப்பது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்து துப்புரவுப் பணியாளர்களும் இனி தூய்மை பணியாளர்கள் (Cleanliness Worker) என்று அழைக்கப்படுவார்கள் என ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அடிப்படை பணிகளின் சிறப்பு விதிகளில் "Cleanliness Workers" என பெயர் மாற்றத்திற்கான திருத்தம் வெளியிட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில் (Government Gazette) வெளியிட்டுள்ளது. அதன்படி, Sanitary Workers, Sweepers, Assistant Sweeper" முதலான பெயர்கள் இனி "Cleanliness Workers" என அழைக்கப்பட வேண்டும் என செய்தி வெளியிட்டுள்ளது.

4. இந்நிலையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் அமைக்கப்பட்ட தூய்மை பணிபுரிவோர் நல வாரியத்தை, ஆங்கிலத்தில் Cleanliness Workers Welfare Board என அழைக்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்

__பெறுநர்:-__

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் / செயலாளர், நிதித்துறை / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை / தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை / பள்ளிக் கல்வித் துறை / மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை / வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை – 600 009.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர்,தாட்கோ, சென்னை-600 018.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம், சென்னை – 600 008.
இயக்குநர்/ ஆணையர், பேரூராட்சிகள், சென்னை - 600 028.
இயக்குநர் / ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை - 600 028.
இயக்குநர்/ ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை -600 015.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
துணைத் தலைவர், தூய்மை பணிபுரிவோர் நல வாரியம் சென்னை- 600 008
தூய்மை பணிபுரிவோர் நல வாரியத்தின் அனைத்து அலுவல் சாரா உறுப்பினர்கள் (மேலாண்மை இயக்குநர்,தாட்கோ வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை-9/18/600 035.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

__நகல்:-__

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதிந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கா. செல்வராணி
22/09/2023
பிரிவு அலுவலர்
22/09/23